வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com  மலர் : 05  26.07.2024 வெள்ளிக்கிழமை  இதழ் : 208  பக்கங்கள் : 12

# ஜனாதிபதித் தேர்தல் திகதி வர்த்தமானி அறிவிப்பு இன்று

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு


கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி உள்ளிட்ட தகவல்களை அறிவித்து இன்று வெள்ளிக்கிழமை அதிவிசேட வர்த்தமானியை வெளியிடுவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

நேற்று வியாழக் கிழமை நடந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி தேர்தல் திகதி, வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படவுள்ள காலப்பகுதி உள்ளிட்ட விடயங்களை குறிப்பிட்டு விசேட வர்த்தமானி இன்று வெள்ளிக் கிழமை வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு திகதி மற்றும் ஏனைய தீர்மானங்கள் குறித்து தனிப்பட்ட தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கும், ஆணைக்குழுவுக்கும் எவ்வித தொடர்பும்கிடையாது என்றும் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)



## தமிழருக்காக குரல்கொடுத்த விக்கிரமபாகு காலமானார்!

கொழும்பு, ஜூலை 26

தமிழ் மக்களின் உரிமைக்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தவரும் நவ சமசமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நேற்று வியாழக்கிழமை காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 81.

விக்கிரமபாகு கருணாரத்ன, இடதுசாரி அரசியலுக்காக பல்வேறு தியாகங்களை செய்து மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் தன் கொள்கைக்காக நின்று போராடிய ஒரு விதிவிலக்கான

11

## ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

### அமைச்சர் விஜயதாஸவும் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 26

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சுதந்திர ஆர்கேட் சதுக்கத்தில் அவர் நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அறிவிப்பை

11

## தங்கத்துரை, குட்டிமணியின் உடல்கள் புதைத்த இடங்களை வெளிப்படுத்துக!

### செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

வெலிக்கடை சிறைப் படுகொலையின்போது கொல்லப்பட்ட எமது தலைவர்களான தங்கத் துரை, குட்டிமணி ஆகியோரின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ரெலோ இயக்கத்தின் தலைவரும் எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், 1983 ஜூலை இனப்படுகொலை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத் துரை, குட்டிமணி ஆகியோரே தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உருவாவதற்கு மூலகாரணமாக இருந்தனர். 1983 ஜூலை

11

## வெடிமருந்துடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 26

வெடிமருந்துகளை யாழ்ப்பாணம் நகரத்துக்கு கொண்டுவந்த போது இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

அரியாலை காளி கோயில் வீதியை சேர்ந்த 32 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான இளைஞரிடம் இருந்து

11

## மானிப்பாய் விபத்தில் தாய் பலி; மகள் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தாயையும் மகளையும் வாகனம் மோதியதில் தாயார் உயிரிழந்தார். மகள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் - கட்டுடை சந்தியில் நேற்று

11

## ஊடகவியலாளர் இசைப்பிரியன் மாரடைப்பால் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூலை 26

ஊடகவியலாளரும் சமூகசெயல் பாட்டாள ருமான இசைப்பிரியன் என்று அறியப்பட்ட அச்சுதநாயர் சேகுவேரா (வயது 38) நேற்று வியாழக்கிழமை காலை மாரடைப்பால் காலமானார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் தொழில் நிமித்தம் நண்பருடன் தங்கியிருந்த நிலையிலேயே நேற்று அவர் காலமானார்.

வவுனியாவை சேர்ந்தவரான இவர் தமிழீழ

11

## ஜனாதிபதித் தேர்தலில் நான் களமிறங்குவேன்!

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 26

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை தனது உத்தியோகபூர்வ எக்ஸ்

11

## வெலிக்கடை சிறை படுகொலை யாழில் நேற்று நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், ஜூலை 26

சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல்வேறு காலகட்டங்களில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் நேற்று நினைவேந்தப்பட்டனர்.

வெலிக்கடை சிறை படுகொலை நடைபெற்ற

11

## புலிகளை பிளவடைய செய்ததைபோன்று ரணில் பெரமுனவையும் உடைத்துவிட்டார்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, ஜூலை 25

புலிகளை இரண்டாக உடைத்தது போன்று எமது கட்சியையும் ரணில் பிளவுபடுத்திவிட்டார். இதுவே, நாம் அவருக்கு செய்த உதவிக்கு எமக்கு அவர் தந்த பரிசு என்று நாமல் ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த சந்திப்பு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாங்கள் முழு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு மூத்த போராளி. தமிழீழத்துக்காக எண்பதுகளின் ஆரம்பத்தில் போராடத் தொடங்கிய ஆயுத இயக்கம் ஒன்றில் தன்னை இணைத்துக்கொண்டு போராடப் புறப்பட்ட ஆயிரக் கணக்கான இளைஞர்களில் அவரும் ஒருவர். லண்டனில் வாழும் அவர் தொலைபேசியில் தொடர்பில் வந்தார். வழக்கமாக சொல்லும் வணக்கத்தைக்கூட மறந்தவராக,

"என்ன இருந்தாலும் முட்டாள் பயலுகள் ஒண்டு சேர்ந்து ஏழு கட்சிகளையும் ஏராளமான பொது அமைப்புகளையும் சேர்த்து ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது சாதனைதான். இந்தப் பொது வேட்பாளர் விசயம் சரியோ, பிழையோ அதெல்லாம் தேவையில்லாதது. ஆனால், அந்த ஒரு விசயத்தை வைச்சுக்கொண்டு ஒரு பெரிய கட்டமைப்பை உருவாக்கினது சாதனைதான்" என்றார்.

பொதுவேட்பாளர் விடயத்தில் கடந்த சில மாதங்களாகத் தமது கவனத்தை திருப்பியிருந்தவர்களை பார்த்து "கிறேசி பீப்பிள்" (முட்டாள்கள்) என்று சம்பந்தனும் சுமந்திரனும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதுதான் அவரும் முட்டாள் பயலுகள் ஒன்றுசேர்ந்து என்று சொன்னார் என்று நினைக்கிறேன்.

அவர் இவ்வாறு சொன்னதும் என்னையும் சேர்த்துத்தான் முட்டாள் என்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. காரணம் இந்த விவகாரம் பேசுபொருளாகியதிலிருந்து இந்த ஊர்க்குருவியும் அதற்கு ஆதரவாகத்தான் எழுதி வந்திருக்கின்றது.

நண்பர் லண்டனிலிருந்து பேசினாலும், வட்ஸ் அப்பில் தொடர்பில் வந்ததால் ஆசுவாசமாக பேசமுடியும் என்பதால் அவரிடம் கேட்டேன், "நேரம் இருக்கிறதா? இருந்தால் ஒரு கதை ஒன்று சொல்லலாம்" என்றேன். அவரும் சம்மதித்ததால் கதையைச் சொன்னேன்.

ஒரு முறை நடைபாதையில் லைசன்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்ததற்காக ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

அவர் அந்த ஊருக்கு புதிது, அதனால் அங்கு நடைபாதையில் வியாபாரம் செய்ய லைசன்ஸ் தேவை என்பது தெரிந்திருக்கவில்லை.

அவர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார் - அங்கு நீதிபதி முன் ஏற்கனவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் லைசன்ஸ் இல்லாமல் விபசாரம் செய்ததால் கைது செய்து செய்யப்பட்டிருந்தனர். அந்த நாட்டில் விபச்சாரம் செய்யவும் லைசன்ஸ் வழங்கப்படுகிறது. அவர்கள் அத்தகைய லைசன்ஸ் பெறாமல் தொழிலில் ஈடுபட்டதால் மாட்டிக்கொண்டனர்.

நீதிபதி முதல் பெண்ணிடம் கேட்டார் "நீ யார், என்ன செய்துகொண்டிருந்தாய்? இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?"

முதல் பெண் "நான் ஒரு மொடல், என்னை தவறாக கைது செய்துவிட்டனர்" என்று பொய் சொன்னாள்.

நீதிபதி "30 நாள் கடும் காவல் தண்டனை" என்று சொல்லிவிட்டு இரண்டாம் பெண்ணை பார்த்து இதே கேள்விகளை கேட்டார்.

இரண்டாம் பெண் " நான் ஒரு நடிகை! இதற்கும் எனக்கும் சிறிதளவும் சம்மந்தமில்லை" எனச் சொன்னாள் (பொய்தான்).

நீதிபதி "உனக்கு 60 நாள் கடும் காவல் தண்டனை" என்று சொல்லிவிட்டு மூன்றாம் பெண்ணை பார்த்து இதே கேள்விகளை கேட்டார்.

மூன்றாம் பெண் "ஐயா! நான் ஒரு விபச்சாரி, லைசன்ஸ் பற்றி எனக்கு தெரியாது, எனக்கு வேறு தொழிலும் தெரியாது" எனச் சொன்னாள்.

இதைக் கேட்ட நீதிபதி "நான் உன்னை பாராட்டுகிறேன். தண்டனை கிடைக்கும் எனத்தெரிந்தும் உண்மையை சொன்னதற்காக! நான் உன்னை விடுதலை செய்கிறேன். அதுமட்டுமல்ல உனக்கு லைசன்ஸ் வழங்கவும் உத்தரவிடுகிறேன்!" என்று தீர்ப்பு கூறினார்.

இவற்றை மிக அவதானமாக பார்த்துக்கொண்டிருந்த அந்த நடைபாதை வியாபாரி இப்போது நீதிபதி முன்னர் அழைக்கப்பட்டார்.

நீதிபதி தனது வழக்கமான கேள்விகளை அவரிடம் கேட்டார்.

அதற்கு அவர் சொன்னார், "ஐயா! நானும் ஒரு விபச்சாரி, லைசன்ஸ் பற்றி எல்லாம் எனக்கு தெரியாது, எனக்கு வேறு தொழிலும் தெரியாது!".

நான் கதையைச் சொல்லி முடிந்ததும் அவர் சிரித்தார். அவரிடம் நான் கேட்டேன், அந்த நடைபாதை வியாபாரி, முட்டாளா? அறிவாளியா?

அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் என்பதை விட்டுவிடுவோம்.

இந்தக் கதைக்கும் மேலேயுள்ள முட்டாள் பயலுகள் சமாச்சாரத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட பலரும் முயற்சி செய்தனர். அவ்வாறு முயற்சி செய்தவர்களில் தெற்கின் வேட்பாளர்கள் மட்டுமல்ல, அவர்களின் முகவர்களும் தான் முக்கியமானவர்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது என்பது அவர் வெற்றிபெற்று ஜனாதிபதி ஆவதற்காக அல்ல என்பது குழந்தைக்கும் தெரிந்ததுதான். ஆனால் இப்போதும் சிலர், தங்களை புத்திஜீவிகள் என்று தாங்களே கூறிக்கொண்டும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வெற்றிபெறமுடியுமா என்றும் கேட்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு இருந்த ஆயுத பலம் மௌனிக்கப்பட்டுவிட்டது. பாராளுமன்ற பலமும் பல துண்டுகளாக பிரிந்துவிட்டது. இனி இருக்கக்கூடியது மக்கள் பலம் மட்டுமே. தமிழ் மக்கள் எல்லோரும் தமது பிரச்னைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் ஒற்றுமையாக நிற்கிறார்கள் என்பதை காட்டுவது ஒன்றுதான் நமக்கு இருக்கின்ற பலம். அதனை வெளிக்காட்ட கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பம்தான் ஜனாதிபதி தேர்தல். அதனை இனியும் உணராதவர்களைப் பற்றி பேசுவது நமது நேரத்தை வீணடிக்கும் செயல் மாத்திரமே.!

-ஊர்க்குருவி-

# ஹில்டன் ஹோட்டலை 4 கோடி டொலருக்கு விற்க அரசு முடிவு

## மதிப்பு 12 கோடி என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜூலை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 12 கோடி டொலருக்கு மதிப்பிடப்பட்ட கொழும்பு ஹில்டன் ஹோட்டலை 4.1 கோடி டொலருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பிணைமுறி மோசடி நடைபெறாமலிருந்திருந்தால் 2022 ஆம் ஆண்டு நாட்டில் எரிபொருள் வரிசை தோற்றம் பெற்றிருக்காது.

நாட்டை வங்குரோத்துக்கு நிலைக்கு தள்ளியவர்கள் உறக்கத்தில் இருந்து எழுந்ததை போன்று பேசுகிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடந்த பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம், அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளையும் சட்டமாக்க வேண்டிய தேவை கிடையாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு 16 தடவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வங்குரோத்துக்கு பின்னர் 17ஆவது தடவையாக ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள். எரிபொருள் வரிசையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவுக்குக் கொண்டு வந்தார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டார் என்று புகழ்பாடுகிறார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடி நடந்ததை மறந்து விடக்கூடாது.

வங்குரோத்து நிலைக்கு மத்தியில் ஊழல் முடிவுக்கு வரவில்லை. கொழும்பு ஹில்டன் ஹோட்டலை விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஹில்டன் ஹோட்டலின் மதிப்பு 12 கோடி டொலர் என்று மதிப்பிடப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் செலவுகளுக்காக ஹில்டன் ஹோட்டலை 4.1 கோடி டொலருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்துக்கு இணக்கமானவரே ஹில்டன் ஹோட்டலை பெறவுள்ளார் - என்றார். (ஐ)

# பாராளுமன்றில் இரு சட்டமூலங்கள் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

கொழும்பு, ஜூலை 26

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலங்கள் மீதான விவாதம் இடம்பெற்று திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

அரச நிதி முகாமைத்துவம் சட்ட மூலத்துக்கு எதிர்க்கட்சி ஆதரவளித்துடன் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலத்துக்கு தரவளித்தாலும் அதன் சில சரத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மாலை 5,30 மணி வரை விவாதம் நடைபெற்று இறுதியில் சட்டமூலத்துக்கு சபையின் அனு மதியை சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் கோரினார்.

இதன்போது எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், பொருளாதார நிலை மாற்றம் சட்ட மூலத்துக்கு எமது எதிர்ப்பை பதிவிடுகிறோம் என தெரிவித்தார்.

இதன் பிரகாரம் குறித்த இரண்டு சட்டமூலங்களும் திருத்தங்களுடன் சபையில் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டதாக பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். (ஐ)

# கெஹலிய உட்பட 6 பேருக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 26

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 6 பேரை ஓகஸ்ட் 08 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோ குளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட 6 பேரை மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# நிலந்த ஜெயவர்த்தனவின் வழக்கில் சட்டமா அதிபருக்கு காலஅவகாசம்!

கொழும்பு, ஜூலை 26

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னரே புலனாய்வு தகவல் பெற்றிருந்தும் அதனைத் தடுக்கத் தவறியமைக்காக அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி நீதிமன்றில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கான திகதியையும் கோரினார்.

அதன்படி, உரிய ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய ஒக்ரோபர் 9ஆம் திகதி வரை நீதிமன்றம் அவகாசம் அளித்தது.

சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் அருட்தந்தை ரொஹான் சில்வா மற்றும் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஒருவர் இந்த மனுவை சமர்பித்தனர்.

புலனாய்வு தகவல் கிடைத்தும் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்காக நடவடிக்கை எடுக்குமாறு நிலந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.07.2024 வெள்ளிக்கிழமை

குரோதி வருடம், ஆடி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் மக்களை சிறைப்படுத்தவேண்டாம்

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிப்பு தொடர்பான எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுமா அல்லது இரண்டும் ஒன்றாக நடைபெறுமா என்றவாறான செய்திகளும் வெளியாகின்றன. ஒரு வகையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தொடர்ந்தும் ஒரு வகையான குழப்ப நிலைமை தொடர்கின்றது. இது சூழலை குழப்ப வேண்டும் என்னும் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றதா அல்லது ஜனாதிபதி தேர்தலுக்கான வியூகங்களில் ஒன்றா?

இதற்கிடையில் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று அறிவித்திருக்கின்றார். இதேபோன்று, சரத் பொன்சேகாவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தெரிவித்திருக்கின்றார். இந்த அறிவிப்புகளுக்கு மத்தியில் மொட்டு அணி சார்பில் ஒரு வேட்பாளர் நிறுத்தப்படுவாரா என்னும் கேள்வியும் எழுந்திருக்கின்றது. தங்களின் வாக்குவங்கிகளை மற்றவர்கள் அபகரித்து செல்வதை - குறிப்பாக, அநுரகுமார திஸநாயக்கவை நோக்கி செல்வதைத் தடுக்க வேண்டும் என்பதில் ராஜபக்ஷ தரப்பு அக்கறையுடன் இருப்பதாகத் தெரிகின்றது.

நிலைமைகளை உற்றுநோக்கினால் இலங்கையின் வரலாற்றில் எப்போதுமே கண்டிராத ஒரு நெருக்கடிமிக்க ஜனாதிபதித் தேர்தலை கொழும்பு எதிர்கொள்ளவுள்ளது என்பது வெள்ளிடைமலை. இவ்வாறானதொரு நெருக்கடிமிக்க தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் - ஏன் எதிர்கொள்ள வேண்டும்? கொழும்பின் நெருக்கடிக்குள் தமிழ் மக்கள் ஏன் தங்களை சிறைப்படுத்திக் கொள்ளவேண்டும்? இவ்வாறான கேள்விகளில் ஒன்றுக்குக்கூட எவரிடமும் பதிலில்லை. ஆனால், இந்தக் கேள்வி கள் அனைத்துக்கும் ஒரு பதில் உண்டு - அது ஏற்கனவே முன்வைக்கப்பட்டும் விட்டது - அதுதான், தமிழ் பொது வேட்பாளர்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் உறுதியாக பேசப் போவதில்லை - பேசவும் முடியாது. பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான 13ஆவது திருத்தச்சட்டம் என்பதைக்கூட உறுதியாகக் கூறக்கூடிய நிலையில் எந்தவொரு வேட்பாளரும் இல்லை. இந்த நிலையில் இலங்கை தமிழ் அரசு கட்சி எந்த நம்பிக்கையில் வேட்பாளர்களுடன் பேசி முடிவெடுக்கப் போவதாகக் கூறுகின்றது? இலங்கை தமிழ் அரசு கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று எம். ஏ. சுமந்திரன் கூறுகின்றார். எப்போது முடிவெடுக்கும்?

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை அரசியல் ரீதியிலும் தர்க்க ரீதியிலும் கோட்பாட்டு ரீதியிலும் எதிர்க்கவே முடியாது. இதன் காரணமாகவே, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (சைக்கிள்) அணியினர் வெறும் வசைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எப்போது ஓர் அரசியல் கட்சிக்கு வசைகள் தேவைப்படும்? தங்களால் ஒரு விடயத்தைத் தர்க்க ரீதியில் எதிர்க்க முடியாமல் போகும்போதுதான் வசைகளில் சரணாகதி அடைய நேரிடும்.

தமிழ் அரசு கட்சி ஒப்பீட்டு அடிப்படையில் பெரிய தமிழ் கட்சி. வடக்கு - கிழக்கில் ஒப்பீட்டு அடிப்படையில் வலுவான அரசியல் கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றது. ஆனால், தவறான ஆலோசனைக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே காலப்பொருத்தம் கருதிய நிலைப்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் தடுமாறுகின்றது. தமிழ் அரசு கட்சி உண்மையிலேயே தமிழ்த்ள தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கடசியாக தன்னை நிலைநிறுத்த விரும்பின் - முயற்சிப்பின் - அதனால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஒருபோதுமே நிராகரிக்க முடியாது.

# 127,925 சுற்றுலாவிகள் 3 வாரங்களில் வருகை

கொழும்பு, ஜூலை 26

இந்த மாதத்தில் முதல் மூன்று வாரங்களில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 925 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றிலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். அங்கிருந்து, 30 ஆயிரத்து 442 நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

பிரித்தானியா, சீனா, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இதன்படி, இவ்வருடத்தின் இதுவரை யான காலப் பகுதிக்குள் 11 இலட்சத்து 38 ஆயிரத்து 174 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ)

## பரமகுரு சுவாமி குருபூசை தினம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்த குருக்களால் வாராந்த திருவாசக சிறப்புச் சொற்பொழிவும் மாதாந்த ஈழத்து சித்தர்கள் குருபூசையும் நடத்தப்படுகின்றன.

இதன் நான்காவது தொடரில் பரமகுரு சுவாமிகள் குருபூசை தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார். பரமகுரு சுவாமிகள் குரு பூசையை தொடர்த்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் "வணங்க வேண்டிய பரமகுரு சுவாமிகள்" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சொற்பொழிவும் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரையும் குரு பூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## திருமுறைப் பெருவிழாவும் 9ஆம் திருமுறை வெளியீடும்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

இந்து சமயப் பேரவையின் திருமுறைப் பெருவிழாவும் 9ஆம் திருமுறை வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பேரவையின் நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன் நூலை வெளியிட்டு வைக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் முதல் பிரதியை பெறுவார்.

இந்த நூல் வெளியீட்டில் கிடைக்கும் நிதி தமிழ் மக்களின் உரிமை போராட்டம் வெற்றிபெறவேண்டி பேரவை வளாகத்தில் எழுந்தருளியுள்ள சிவகாமி சுந்தரி சமேத நடராஜப் பெருமானின் அருள்வேண்டி ருத்ர மகாயாகம் நடத்தப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சங்கானையில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 21ஆவது நிகழ்வு இன்று வெள்ளக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வு கலா பூஷணம் வைரமுத்து சிவபாலன் நினைவு அரங்கில் ஆசிரியர் செ. சிறி ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ளது.


நூல் அறிமுக உரைகளை திருச்செல்வம் தவரத்தினத்தின் "பிரபஞ்சத்தில் சங்கு" நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா, கலாநிதி ந. இரவீந்திரனின் "ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்" நூல் தொடர்பாக ஆய்வாளர் ச. தில்லை நடேசன், அ. யோ. இன்பராசாவின் "பிரபஞ்சநேசம்" நூல் தொடர்பாக மாற்று மக்கள் சபையின் இயக்குநர் டெபோறா ஜீவமலர் ஆகியோர் வழங்குவர்.

மாலை 5 மணியளவில் சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில், பு. கணேசராசாவின் நெறியாள்கையில் "முட்டை" மற்றும் "அரோகரா" ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன.

புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 26 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 10
நல்ல நேரம் : 09.00 - 13.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சஷ்டி




**மேடம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**மிதுனம்**
உறவினர்கள். நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் உதவுவார்கள். வாகன வசதி பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச் சுமை மிகுந்த நாள்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

# விடுதலை புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி மனு

புதுடில்லி, ஜூலை 26

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி ம. தி. மு. க. பொதுச் செயலாளர், மாநிலங்கள் அவை உறுப்பினர் வைகோ மனுத் தாக்கல் செய்துள்ளார்.




விடுதலைப் புலிகள் அமைப்பை சட்டவிரோத அமைப்பாக அறிவித்து அந்த அமைப்புக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்து மத்திய அரசு கடந்த மே மாதம் 14 ஆம் திகதி அரசாணை பிறப்பித்துள்ளது.

இதற்காக அமைக்கப்பட்ட டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி மன்மீத் ப்ரீத்தம் சிங் அரோரா தலைமையிலான தீர்ப்பாயம் தடை செய்வது குறித்து ஜூலை 23ஆம் திகதிக்குள் விளக்கமளிக்க உத்தரவிட்டிருந்தது. இதன்படி இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தடையை நீக்க வேண்டும். இதுதொடர்பில் மத்திய அரசு பிறப்பித்துள்ள உத்தரவை இரத்துச் செய்யக் கோரி ம. தி. மு. க. பொதுச் செயலாளரான வைகோ, தீர்ப்பாயத்தில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை ஒகட்ஸ் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ)

# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மேலும் ஒருநாள் பொலிஸ் காவலில்

கரூர், ஜூலை 26

22 ஏக்கர் நிலமோசடி வழக்கில் கைதான அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர், அவரது ஆதரவாளர் பிரவீன் ஆகியோரை சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



பின்னர், அவர்களை கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற அனுமதியுடன் சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் கடந்த 22ஆம் திகதி 2 நாள் காவலில் எடுத்து, கரூர் சி. பி. சி. ஐ. டி. அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு விசாரணை நடத்தி, நேற்று முன்தினம் அவர்களை கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலைப்படுத்தினர்.

இதனிடையே, விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் தங்களை மிரட்டி நிலத்தை வாங்கியதாக சம்பந்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர் பிரகாஷ் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில், விஜயபாஸ்கர், பிரவீன் ஆகியோரை 7 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றத்தில் அனுமதி கோரிய நிலையில், ஒரு நாள் அனுமதி வழங்கி நீதிபதி உத்தரவிட்டார். இதனையடுத்து இருவரையும் பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். (எ)

# "இ. பி. எஸ். இருக்கும் வரை அ. தி. மு. க. ஒன்றிணையாது"

தேனி, ஜூலை 26

பழனிச்சாமி ஒரு சுயநலவாதி, பதவி வெறி கொண்டவர். துரோக சிந்தனை கொண்ட அவர்தான் அ. தி. மு. க. ஒன்றிணைய தடைக்கல்லாக இருக்கிறார். இ. பி. எஸ். பொதுச் செயலாளராக இருக்கும்வரை அ. தி. மு. க. ஒன்றிணைய வாய்ப்பில்லை- இவ்வாறு அ. ம. மு. க. பொதுச் செயலாளர் ரி. ரி. வி. தினகரன் தெரிவித்தார்.

தேனி அருகே பழனிச்செட்டிபட்டியில் அ. ம. மு. க. சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மத்திய பட்ஜெட் ஏழைகள், விவசாயிகள், மாணவர்களுக்கான தொலைநோக்கு பட்ஜெட். தமிழ்நாட்டுக்கு சிறப்புத் திட்டம் இல்லை என்றாலும், இது நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட்.

அ. தி. மு. கவை பா. ஜ. க. அழிக்கப் பார்க்கிறது என்பதெல்லாம் பொய்.

ஜெயலலிதாவின் தொண்டர்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற ஆசையில்தான் சசிகலா சுற்றுப்பயணம் செய்கிறார்- என்றார். (எ)

# நாட்டை பிளவுபடுத்த தயாராகிறது காங்கிரஸ்

## பா. ஜ. க. பகிரங்க குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 26

சாதி, மத, மொழி ரீதியாக இந்த நாட்டினை துண்டாட தயாராகி வரும் காங்கிரஸ், மாநில உரிமைகள் என்ற போர்வையில் நுழைந்து மக்களை மோசடி செய்யப் பார்க்கிறது என்று தமிழக பா. ஜ. க. துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில், ராகுல் காந்திக்கு 15 ஆண்டுகள் ஆட்சியை இழந்துவிட்ட விரக்தியும், பா. ஜ. க. மீதான வெறுப்பும், காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்த மக்கள் மீதான கோபமாக மாறியுள்ளது. "பாராளுமன்றத்தில் உள்ள என் அலுவலகத்துக்கு விவசாயிகளை அழைத்தேன்.

ஆனால், அவர்களை அனுமதிக்கவில்லை" என்று ராகுல் காந்தி கூறியிருப்பது, நாட்டினைத் துண்டாட யாரை வேண்டுமானாலும் தூண்டிவிட தயார் என்பதையே உணர்த்துகிறது என்று நாராயணன் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# "வெறுப்புடன் நடத்தாதீர்கள்"

சென்னை, ஜூலை 26

அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப அரசை நடத்தினால், தனிமைப்பட்டுப் போவீர்கள் என்று பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் மு. க. ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"தேர்தல் முடிந்துவிட்டது, இனி நாட்டை பற்றியே சிந்திக்க வேண்டும்" என்று கூறினீர்கள். ஆனால், பட்ஜெட் உங்கள் ஆட்சியை காப்பாற்றுமே தவிர, இந்தியாவை காப்பாற்றாது. அரசை பொதுவாக நடத்துங்கள். இன்னமும், தோற்கடித்தவர்களை பழிவாங்குவதில் குறியாக இருக்க வேண்டாம் என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் எனக்கூறி ரூ. 3 இலட்சம் கப்பம் பெற்ற இளைஞர் கைது!!

யாழ்ப்பாணம், ஜூலை 26

**தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் என்று அடையாளப்படுத்தி 3 இலட்சம் ரூபாய் கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

கைதானவர் இளவாலையை சேர்ந்தவராவார். இவர், தன்னை பொலிஸ் புலனாய்வு பிரிவை சேர்ந்தவர் என்று அடையாளப் படுத்தி ஒருவரை மிரட்டி 3 இலட்சம் ரூபாயை கப்பமாக பெற்றுள்ளார்.

பணத்தை கொடுத்த நபர் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸார், நடத்திய விசாரணையில் இளவாலையை சேர்ந்த இளைஞர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# பொலிஸாரால் அச்சுறுத்தல்; தந்தை, மகன் முறைப்பாடு!

வடமராட்சி, ஜூலை 26

நள்ளிரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த பொலிஸார் தம்மை அச்சுறுத்தினர் என்று தந்தையும் மகனும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர்கள் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தினர். இதன்போது, கருத்து வெளியிட்ட தந்தை,

கடந்த சனிக்கிழமை நள்ளிரவுவேளை வீட்டுக்குள் நுழைந்தவர்கள் தம்மை போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் என்று அறிமுகப்படுத்தினர். அவர்கள், என்னையும் மகனையும் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்று தாக்கினர். இது நான்காவது முறையாக நடந்துள்ளது. இதனால், எனது மகன் கல்வி கற்கச் செல்லவும் அச்சப்படுகிறான் - என்று கூறினார். (ஐ-2)



வவுனியா தெற்கு பாடசாலைகளில்

# ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கக்கோரி போராட்டம்!

வவுனியா, ஜூலை 26

வவுனியா தெற்கு வலயத்தில் 22 சிங்கள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனைக்கு முன்பாக நேற்று முன்தினம் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது ஆசிரியர்களை நியமிக்கக் கோரியும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாத வகையில் செயல்படக் கோரியும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரமாக நடந்த இந்தப் போராட்டத்தில் பலர் பங்கேற்றிருந்தனர்.

வவுனியா தெற்கு பிரதேசம் கடந்த இரு தசாப்தத்துக்கு மேலாக சிங்கள குடியேற்றப் பிரதேசமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழில் சர்வதேச புத்தக திருவிழா ஓகஸ்ட் 9, 10, 11ஆம் திகதிகளில்!




யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இது தொடர்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன.

நாம் நமது உடலுக்கு உடற்பயிற்சி செய்வது போல, வாசிப்பு என்பது நம் மனதுக்கும் புத்திக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது. அதிவேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப இந்த உலகில் நமது சமூகத்தில் வாசிப்பு கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

அந்த வகையில் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்களிடையே வாசிப்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான புத்தகங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

உள்நாட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஆர்வமும் பங்குகொள்ள விருப்பமும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் பல புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன. ஆனால், யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றமானது இந்த புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கண்காட்சி வடக்கு மாகாணத்தின் நூலகங்கள், சனசமூக நிலையங்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும். பாடசாலைகள்கூட தமது நூலகங்களுக்கு தேவையான புத்தகங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

புத்தக திருவிழா நடைபெறும் தினங்களில் புத்தக வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள், கலை - கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந்தக் கண்காட்சியை இலவசமாக பார்வையிடமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் கு. விக்னேஷ், வர்த்தக தொழில்துறை மன்ற தலைவர் கலாநிதி வாசுதேவன் இராசையா, உப தலைவர் கலாநிதி செல்லத்துரை திருமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# யாழ். பல்கலை வணிகபீட புதுமுக மாணவர்களின் அறிமுக நிகழ்வு!



யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்குத் தெரிவாகி பதிவு செய்த மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் - அறிமுகப்படுத்தல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மறும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தலைமையில் கலாசாலை வீதியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

2022ஆம் ஆண்டு நடந்த கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து தொழில் நிர்வாகமாணி மற்றும் வணிகமாணி கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 600 புதுமுக மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் [illegible]ளர், நூலகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மறும் வணிக பீடத்தின் துறைத்தலைவர்கள் மற்றும் இணைப்பாளர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் அறிமுக உரை [illegible] ஆற்றினர். (ஐ)



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 61ஆவது பட்டமளிப்பு விழாவில் நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களுக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் "சைவாகம பூஷணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டபோது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநல நோய் அறிகுறிகளுடன் சிகிச்சைக்கு வருவோர் அதிகரிப்பு

## மருத்துவர் பாலித ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 25

**மனநல நோய் அறிகுறிகளுடன் பதுளை போதனா மருத்துவமனைக்கு வருகை தரும் சிறுவர்கள், இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அந்த மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மனநல நோய் அறிகுறிகளுடன் நாளாந்தம் 4 முதல் 5 சிறுவர்களும், 3 முதல் 4 இளைஞர், யுவதிகளும் மருத்துவமனைக்கு வருகின்றனர்.

மயக்கம், வேகமாக சுவாசித்தல், நெஞ்சு வலி, கை - கால் மரத்துப் போதல், கை - கால் விரல்கள் இழுத்தல், சுவாசிக்கச் சிரமம் ஏற்படல், அதிகமாக வியர்வை வெளியேறுதல் மற்றும் தூக்கமின்மை உள்ளிட்டவை மனநல நோய் அறிகுறிகளுடனே இவர்கள் மருத்துவமனைக்கு வருகின்றனர்.

இது பெரும்பாலும் "பானிக் அற்றாக்" (Panic Attack) என்று அழைக்கப்படுகின்றது. அதிகளவான அச்சம், வாழ்க்கை தொடர்பான அச்சம், சமாளிக்க முடியாத சூழ்நிலைகளால் பானிக் அற்றாக் ஏற்படலாம். எனவே, இத்தகைய நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நீதிமன்றம் அருகே வாள்வெட்டு நடத்த முயன்ற சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கில் முற்பட்டு விட்டு திரும்பியவரை வெட்டுவதற்காக வாளுடன் துரத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராசாவின் தோட்ட வீதியிலுள்ள வீடொன்றில் 24 வயதான சந்தேக நபர் பதுங்கியிருக்கிறார் என்று யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குக்கு வந்துவிட்டு திரும்பிய ஒருவரை வெட்டுவதற்காக மூவர் வாளுடன் துரத்தினர். இதனால் அச்சமடைந்த அந்த நபர் மீண்டும் நீதிமன்ற வளாகத்துக்குள் தஞ்சம் புகுந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவானின் கட்டளைக்கு அமைய சந்தேகநபர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைதான சந்தேகநபர் மீது வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பில் நான்கு திறந்த பிடியாணைகள் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தமிழரும் முஸ்லிம்களும் ஒன்றுசேரும் தருணமிது!

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 26

தமிழ் பேசும் மக்கள் எனும் பொது அடிப்படையில் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்று சேர வேண்டிய தருணம் இது. இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக உள்ளது என்றும் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றும் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்தவை வருமாறு,

"எமது நாட்டில் பல திருப்புமுனையான தேர்தல்கள் அண்மித்துள்ள இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்கள் எனும் ரீதியில் தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டியது எமது கடமையாகும்.

முதலாவது குடியரசு அரசமைப்பு 1972ஆம் ஆண்டு உருவானபோது, தமிழர் ஐக்கிய முன்னணி 1974இல் உதயமாகி பின்னர் 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறி இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் அனைவரையும் உள்ளீர்த்து எப்படி செயல்பட்டதோ, அதேவிதமாக தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய காலத்தின் கட்டாயம் தற்போதும் ஏற்பட்டுள்ளது.

இந்த வரலாற்று கடமையை நிறைவேற்ற அமரர்கள் தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் ஸ்தாபித்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயத்தமாக உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொலிஸார் இரு தடவைகள் சிந்தித்து செயல்பட வேண்டும்!

## பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 26

மக்கள் வசிப்பிட பகுதிகளில் பாதாள உலகக் குழுக்களிடையே நடக்கும் மோதல்கள் அல்லது வேறு மோதல்களின் போது நேரடியாக துப்பாக்கிகளை பயன்படுத்தி நிலைமையை கட்டுப்படுத்தவோ, அடக்கவோ பொலிஸாரால் முடியாது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் சிந்தித்து அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பொலிஸார் சிக்கல்களை சந்திக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,




"அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மோதலில் ஈடுபடுபவர்கள் வாகனத்தில் பயணிக்கலாம். ஆகவே, சரியான இலக்கை குறி வைப்பது கடினமாக இருக்கும். பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அதிகம் சிந்திக்க வேண்டும்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அதற்கேற்ற வகையில் பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்துவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். துப்பாக்கிச் சூடு நடத்துவதா இல்லையா என்பது சம்பவத்துக்கு சம்பவம் வேறுபடுகிறது.

கண்டியில் இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றது. சந்தேகநபர்களை நோக்கி சுடப்பட்ட சம்பவத்தில் பெண் ஒருவர் தவறுதலாக உயிரிழந்தார். எனவே, மக்கள் வசிப்பிட பகுதிகளில் துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு முன்னர் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும்" - என்றார். (ஐ)

# சமூக ஆலோசனை குழுக்களுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை!

கொழும்பு, ஜூலை 26

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட சமூக ஆலோசனை குழுக்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை தடுத்து உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்தவேட்பாளர்கள் தமது நடவடிக்கைகளை மேம்படுத்த அரச சொத்துகளை பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு அரச நிறுவனங்கள் மற்றும் அதன் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

அந்த கடிதத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வி. எஸ். எவ். நடைமுறைக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, ஜூலை 26

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வி. எஸ். எவ். நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளனர்.

எதிர்க்கட்சிகளை சேர்ந்த சம்பிக்க ரணவக்க, எம். ஏ. சுமந்திரன், ரவூப் ஹக்கீம் ஆகியோரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

நாட்டின் மிக முக்கியமான பாதுகாப்பு தரவுகளுக்கு ஆபத்து என்பதால் வி. எஸ். எவ். நடைமுறைக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவை பிறப்பிக்கவேண்டும் - என்றும் அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர். (ஐ)

# சிறுபோகம் முடிவடைந்ததும் பயறு பயிரிடும் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 26

2024ஆம் ஆண்டுக்கான சிறுபோகம் முடிவடைந்தவுடன் பயறு பயிரிடும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2024 சிறுபோகத்தில் இதுவரை 4464 ஹெக்ரெயர் பயறு பயிரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்றாவது போகமாக இடைப்பட்ட போகத்தில், 8 ஆயிரத்து 943 ஹெக்ரெயரில் பயறு பயிரிடப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காரில் போதைப்பொருளை வைக்கமுயன்ற பொலிஸார்?

## வலைதளத்தில் பிரபலமாகும் காணொலி

கொழும்பு, ஜூலை 26

கொழும்பில் கார் ஒன்றை சோதனையிட்ட பொலிஸார் அதில் போதைப்பொருளை மறைத்து வைக்க முற்பட்டனர் என்று கூறப்படும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் பிரபலமாகியுள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்ற இடம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அதேநேரம், காணொலியின் உறுதித்தன்மையும் நிரூபிக்கப்படவில்லை.

வாகனத்தை சோதனை செய்த பொலிஸார், காரினுள் போதைப்பொருளை மறைத்து வைக்க முற்பட்டனர் என்று கூறி இளைஞர்கள் குழு ஒன்று கூறுவது காணொலியில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது இளைஞர்கள் தங்கள் சட்டத்தரணிகளை தொடர்பு கொள்வதாகவும் கூறுகின்றனர்.

இதேநேரம் இலங்கையில் போதைப் பொருள் ஒழிப்பு திட்டத்தை பொலிஸார் தவறாக பயன்படுத்தினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய மருந்துகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்படலாம்?

## நெருக்கடியில் சுகாதார துறை

கொழும்பு, ஜூலை 26

**அரச மருத்துவமனைகளில் 850 அத்தியாவசிய மருந்துகளில் 329 மருந்துகள் மூன்று மாதங்களுக்குக்கூட போதுமானவையாக இல்லை என மருத்துவ வழங்கல் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

850 வகையான அத்தியாவசிய மருந்துகளில் 643 இதய நோய்கள், குழந்தை நோய்கள் மற்றும் மன நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ வழங்கல் துறையின் சுகாதார தரவின்படி, 88 வகையான மருந்துகள் எந்த மருத்துவமனையிலும் இல்லை. புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் 97 வகையான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளில் 50 வீதமானவை இல்லை என்று புற்றுநோய் மருத்துவர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

விநியோகஸ்தர்களுக்கு நிலுவை தொகையை வழங்காததால் இவ்வாறு மருந்து தட்டுப்பாடு மீள உருவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு கூறுகிறது.

மருத்துவ விநியோக துறை மற்றும் அரச மருந்து ஒழுங்குமுறை கூட்டுத்தாபனத்தில் இருந்து விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை 800 கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றபோதும் உரிய தீர்மானம் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சதொசவில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 26

வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின்படி லங்கா சதொச சில அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில்,

சதொச பால்மாவின் 400 கிராம் பொதி 40 ரூபாய் குறைக்கப்பட்டு 910 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஒரு கிலோ பச்சைப்பயறு 998 ரூபாயிலிருந்து 965 ரூபாயாகவும் ஒரு கிலோ ஒரு கிலோ இந்திய உப்பு 305 ரூபாயிலிருந்து 285 ரூபாயாகவும் ஒரு கிலோ கொண்டைக்கடலையின் விலை 455 ரூபாயிலிருந்து 444 ரூபாயாகவும் ஒரு கிலோ கோதுமை மா 190 ரூபாயிலிருந்து 185 ரூபாயா கவும் ஒரு கிலோ வெள்ளை சீனி 263 ரூபாயிலிருந்து 258 ரூபாயாகவும் ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 204 ரூபாயிலிருந்து 199 ரூபாயாகவும் பாகிஸ்தான் பெரிய உப்பின் விலை கிலோ 190 ரூபாயிலிருந்து 185 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பொலிஸ் மா அதிபராக லலித் பத்திநாயக்க?

கொழும்பு, ஜூலை 26

தேசபந்து தென்னக்கோன் தொடர்பான உயர்நீதிமன்ற உத்தரவால் வெற்றிடமான பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மத்திய மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் திணைக்களத்திலுள்ள தற்போதைய அதிகாரிகள் வரிசையில் பத்திநாயக்க அடுத்த உயர் அதிகாரியாக கருதப்படுகிறார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்கவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குழு அவரை அண்மையில் விடுவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அவரைத் தொடர்ந்து பொலிஸ் திணைக்களத்தில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களான பிரியந்த வீரசூரிய, சஞ்சீவ தர்மரத்ன, சஜீவ மெதவத்த, தமிந்த சிறீ ராஜித, கித்சிறி ஜயலத், ரன்மல் கொடித்துவக்கு, அஜித் ரோஹண ஆகியோர் மூத்த அதிகாரிகளாவர். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியினர் ரணிலுடன் சேரமாட்டார்கள்!

## துஷார இந்துனில் எம். பி.

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அணியில் இணைய மாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

எனினும், தமது கட்சியின் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் ரணிலுக்கு ஆதரவு வழங்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் அணியுடன் இணைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. எனினும், எதிர்வரும் ஒகஸ்ட் 8ஆம் திகதி 35 முதல் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சஜித்துடன் இணையத் தயாராக இருக்கின்றனர்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதா என்ற பிரச்னையை தீர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறுகின்றோம். ஜனாதிபதித் தேர்தலுக்கு உங்களுடன் இணைந்து கொள்வதாகக் கூறி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை காட்டிக் கொடுக்காதீர்கள். இந்த விடயத்தில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்தக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் என்பதில் சாத்தியம் இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறத் தவறினால் அவர் போட்டியிடப் போவதில்லை. அப்படியானால் பொன்சேகாவும், ராஜிதவும் செல்ல இடமில்லாமல் போய்விடும்" - என்றார். (ஐ)

# உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அமைச்சரவையால் மாற்றமுடியாது!

கொழும்பு, ஜூலை 26

பொலிஸ்மா அதிபர் தொடர்பான நீதிமன்ற உத்தரவை அமைச்சரவை மாற்றமுடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி சாலியபீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு தொடர் பிலும் அது தொடர்பான சட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அடுத்த இரு தினங்களுக்குள் முடிவை தெரிவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை எவ்வாறான தீர்மானத்தை எடுத்தாலும் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான மனுக்கள் தொடர்பான இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை அவர் பொலிஸ்மா அதிபராக பணிபுரிவதை நீதிமன்றம் கட்டுப்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தற்போது நடைமுறையில் உள்ளது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவை அமைச்சரவை மாற்ற முடியாது. பொலிஸ்மா அதிபருக்கான அதிகாரங்களை தென்னக்கோன் பயன்படுத்த முடியாது. நீதிமன்றத்தின் உத்தரவை எந்த தரப்பாவது மீறமுயன்றால் அது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும் - என்றார்.

# பெண்ணை தாக்கிய சிப்பாய் கைது

கொழும்பு, ஜூலை 26

பணம் கேட்டு உயிரிழந்த சிப்பாயின் மனைவியை தாக்கிய சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹியத்தகண்டிய இராணுவ முகாமை சேர்ந்த சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கானவர் உயிரிழந்த சிப்பாயின் மனைவியாவார். இருவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இந்த நிலையில், பெண்ணிடம் பணம் கேட்டு சிப்பாய் தாக்கியுள்ளார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# மனைவியை மிரட்டுவதற்காக குழந்தையை தாக்கியவர் கைது!

கொழும்பு, ஜூலை 26

மனைவியை மிரட்டுவதற்காக 3 வயது குழந்தையை கொடூரமாக தாக்கிய தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி - எல்பிட்டிய பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு கரந்தெனிய பிரதேசத்தில் 3 வயது ஆண் குழந்தை ஒன்றை ஒருவர் கொடூரமாக துன்புறுத்துகிறார் என்று 118 அவசர தொலைபேசி இலக்கம் மூலம் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்தப் பிரதேசத்தை சேர்ந்த 24 வயது நபரான குழந்தையின் தந்தையை பொலிஸார் கைது செய்தனர்.

கைதானவரின் மனைவி தொழில் நிமித்தம் வெளிநாட்டிலுள்ளார். குழந்தை தந்தையுடன் வசித்து வந்துள்ளது.

பசியால் உணவு கேட்ட குழந்தையை சித்திரவதைக்கு உள்ளாக்கி அதை காணொலியாக எடுத்து குழந்தையின் தாய்க்கு அதாவது அவரின் மனைவிக்கு அனுப்பியமை விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# யுக்திய நடவடிக்கையில் 719 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 26

நாடளாவிய ரீதியில் நேற்று காலை முடிவடைந்த யுக்திய நடவடிக்கையில் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 719 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 699 ஆண்களும் 20 பெண்களும் அடங்குவர். கைதானவர்களில் 26 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இருவர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 199 கிராம் 35 மில்லிகிராம் ஹெரோயின், 764 கிராம் 41 மில்லிகிராம் ஐஸ், 3,672 கிராம் 709 மில்லிகிராம் கஞ்சா, 3,235 கஞ்சா இலைகள் மற்றும் 710 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# தென்னக்கோன் விவகாரம்:

## பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க ஜனாதிபதி யோசனை

கொழும்பு, ஜூலை 26

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் செயல்படுவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையை விதித்துள்ளமை குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

அத்துடன், இது குறித்து ஆராய்வதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதற்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த விசேட அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர்களாக உள்ளீர்க்க தீர்மானம்

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 26

**கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களாக பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான கோரிக்கை முன்வைத்தால் அதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி எம். பி. ரோஹிணி குமாரி கவிரத்ன எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“2014 ஆம் ஆண்டு கிழக்கில் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் வகையில் தகைமையுடைய ஆசிரிய உதவியாளர்கள் அதற்காக நியமிக்கப்பட்டார்கள்.

அவர்கள் ஆசிரிய பயிற்சிகளை கோரியுள்ளபோதும் அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு சென்றால் வகுப்பறைகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமற் போவர் என்பதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அந்த வகையில் 2014 ஆம் ஆண்டு அவ்வாறு இணைத்து கொள்ளப்பட்டவர்கள். கடந்த 10 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இதுவரை அவர்கள் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப் படவில்லை.

தற்போது மத்திய மாகாணத்தில் இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய உதவியாளர்களும் அவ்வாறு தம்மை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

அவர்கள் தொடர்பில் கல்வியமைச்சு எத்தகைய நடவடிக்கை எடுக்கவுள்ளது” என்று ரோஹிணி குமாரி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த, இந்த விடயம் தொடர்பில் அவர்கள் கல்வி அமைச்சுக்கு கோரிக்கை முன்வைத்தால் ஆசிரியர் சேவை யாப்புக்கு இணங்க அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கல்வி மைச்சு உரிய நடவடிக்கை எடுக்கும்- என்றார். (எ)

# கறுப்பு ஜூலை நினைவாக மட்டக்களப்பில் போராட்டம்



மட்டக்களப்பு, ஜூலை 26

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் புதன்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்றது.

கறுப்பு ஜூலை 41ஆவது ஆண்டு நினைவாக இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கையில் ஒப்படைத்த எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது?, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ)

# உணவு பழக்கமும் நாளாந்த செயல்பாடும் தொடர்பில் பெற்றோருக்கு விழிப்புணர்வு

காரைதீவு, ஜூலை 26

முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் தேசிய அபிவிருத்தி வாரத்தையொட்டி காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலின் கீழ் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஜெஸ்மிரின் நெறிப்படுத்தலில் காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களுக்கு “பிள்ளைகளின் உணவுப் பழக்கமும் நாளாந்த செயல்பாடும்” எனும் தலைப்பிலான விழிப்புணர்வு கருத்தரங்கு புதன்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் கலந்து கொண்டதோடு, காரைதீவு சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ தாதியர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். (எ)





# முஸ்லிம் மக்களின் காலில் விழுந்து மன்றாடினாலும் மன்னிக்க முடியாது

## ஜனாஸா தகனம் குறித்து இம்ரான் எம். பி.

கொழும்பு, ஜூலை 26

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோருவது வெறும் கண்துடைப்பாகும். ஒவ்வொரு முஸ்லிம் மக்களின் காலில் விழுந்து மன்றாடினாலும் மன்னிக்க முடியாது. இது தொடர்பில் எமது மக்கள் மிகத் தெளிவாக உள்ளார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமையால் முஸ்லிம் மக்களின் மனங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மன்னிப்பு கோரும் வகையில் அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை தற்போது பரவலாக பேசப்படுகிறது.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான அறிவிப்புக்களை விடுத்து மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இது வெறும் கண்துடைப்பு என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். மன்னிப்பு கோரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்த இந்த மூன்று அமைச்சர்களும் அன்று அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்தார்கள்.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு செயல்படுகிறார்கள். முஸ்லிம் சமூகம் மிகத் தெளிவாக உள்ளது என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கோவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களில் 276 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டன. இதனால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் துடித்தார்கள். கண்ணீர் சிந்தி கதறி அழுதார்கள். அக்காலப்பகுதியில் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்டார்கள்.

பலவந்தமான தகனம் என்ற இழிவான செயல்பாட்டை அரசாங்கம் கடுமையாக முன்னெடுத்தது. கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் மனசாட்சியில்லாமல் செயல்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி மற்றும் அவரது அமைச்சின் உறுப்பினர்கள் ஜனாஸா எரிப்புக்கு இணக்கம் தெரிவித்தார்கள். ஆகவே, தற்போது மன்னிப்பு கோருவது எம்மை ஏமாற்றும் செயல்பாடு.

பலவந்தமான முறையில் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள போதும் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஜனாஸா தகனத்துக்கும் ராஜபக்ஷக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை காண்பிடிக்கும் வகையில் ஜனாதிபதி அண்மையில் சபையில் உரையாற்றினார். தேர்தலுக்காக எமது சமூகத்தை ஏமாற்றுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் வாழும் ஒவ்வொரு முஸ்லிம்களின் காலில் விழுந்து மன்றாடி மன்னிப்பு கோரினாலும் மன்னிக்க முடியாத அளவுக்கு இந்தச் சம்பவம் காணப்படுகிறது- என்றார். (எ)

# மாடு மேய்க்க சென்றவர் யானை தாக்கி மரணம்!

திருகோணமலை, ஜூலை 26

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5ஆம் கட்டை கடவான காட்டுப் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை பொது மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய இவரது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இந்த நபர் மாடுகளை மேய்ப்பதற்காக குறித்த காட்டுப் பகுதிக்குள் சென்றிருந்த வேளை யானை தாக்கி உயிரிழந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்தது.

கே. ஜி. நிலந்த இந்துனில் (வயது- 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாகவும் இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிலிப்பைன்ஸில் மழை, வெள்ளம்

# 13 பேர் உயிரிழப்பு 6 இலட்சம் பேர் பாதிப்பு

மணிலா, ஜூலை 26

**பிலிப்பைன்ஸில் கனமழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்ததாக அரசு அறிவித்துள்ளது. இதேவேளை, 6 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தெற்கு சீன கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை புயலாக வலுப்பெற்றது. "கெமி" என பெயரிடப்பட்ட இந்தப் புயல் கிழக்கு தாய்வானை நோக்கி நகர்ந்து தற்போது பிலிப்பைன்ஸ் அருகே உள்ள கடலில் மையம் கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸில் கனமழை வெளுத்து வாங்கியது. அங்குள்ள கரையோர மாவட்டங்களில் இடி, மின்னலுடன் பெய்த கனமழை காரணமாக முக்கிய நகரங்கள் சின்னா பின்னமாகின.

தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியதில் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மின் கம்பங்கள், மரங்கள் என்பன சூறைக்காற்றில் சிக்கி சாய்ந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரங்களில் இருந்த 6 இலட்சம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டன. பொதுப் போக்குவரத்து சேவை இரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில் வெள்ளத்தில் சிக்கியவர்களை படகுகள் மூலம் மீட்கும் பணியில் அந்த நாட்டின் பேரிடர் மீட்புத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, பிலிப்பைன்ஸில் கனமழைக்கு 13 பேர் உயிரிழந்ததாக அரசு அறிவித்துள்ளது. (எ)

# கமலா ஹாரிஸால் வெற்றிபெற முடியுமா?

### ஒபாமா சந்தேகம்



நியூயோர்க், ஜூலை 26

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் யார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அந்தக் கட்சியை சேர்ந்த பிரமுகர்களில் பெரும்பாலானவர்கள் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால், முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா அமைதி காத்து வருகிறார்.

இது குறித்து பிரபல அமெரிக்க பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது. அதில் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை ஜனநாயக கட்சியை சேர்ந்த கமலா ஹாரிஸால் வீழ்த்த முடியும் என ஒபாமா கருதவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒபாமா உற்சாகம் குறைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், கமலா ஹாரிஸ் இந்தப் போட்டியில் வெல்ல முடியாது என அவர் நினைக்கிறார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மியன்மார் ஜனாதிபதிக்கு திடீர் உடல் நலக்குறைவு

### பிரதமரிடம் அதிகாரங்கள் மாற்றம்



நேபிடா, ஜூலை 26

மியன்மார் ஜனாதிபதி மைன்ட் ஸ்வே உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவரது அதிகாரங்கள் அனைத்தும் தற்காலிகமாக மியன்மார் பிரதமரும், தேசிய நிர்வாக சபையின் தலைவருமான மின் ஆங் ஹ்லைங்குக்கு மாற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைன்ட் ஸ்வே சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் வரை மின் ஆங், தற்காலிக ஜனாதிபதியாக செயல்படுவார் எனவும், அவர் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு சபை தொடர்பான பணிகளை கவனிப்பார் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ)

# ஜனநாயகத்தை பாதுகாக்கவே தேர்தலில் இருந்து விலகினேன்

### ஜனாதிபதி ஜோ பைடன் விளக்கம்



வாஷிங்டன், ஜூலை 26

ஜனநாயகத்தை பாதுகாக்கவே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகினேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விளக்கமளித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஜோ பைடன் அறிவித்திருந்தார். இந்தச் சூழலில் அதற்கான காரணத்தை நாட்டு மக்களிடம் அவர் விளக்கியுள்ளார்.

"ஜனநாயகத்தை பாதுகாப்பது அனைத்தையும் விட முக்கியமானது. அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும். இதற்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. அதில் தனிப்பட்ட காரணமும் அடங்கும். நான் இந்த பொறுப்பை மதிக்கிறேன். அதை விட தேசத்தை அதிகம் நேசிக்கிறேன். இதன் மூலம் ஜனநாயகக் கட்சியை ஒன்றிணைக்க விரும்புகிறேன்.

துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் திறன் கொண்டவர். அனுபவமும் பெற்றவர். நம் நாட்டின் சிறந்த தலைவர்களில் ஒருவராக பணியாற்றியுள்ளார். இப்போது தெரிவு அமெரிக்க மக்களிடம் உள்ளது. பொது வாழ்க்கையில் அனுபவம் கொண்டவர்களுக்கு எப்போதும் இடம் உண்டு. அதே நேரத்தில் இளம் தலைமுறையினருக்கும் இங்கு வாய்ப்பு உண்டு" என பைடன் கூறினார். (எ)

# அமெரிக்க உளவு பிரிவு இயக்குநர் இராஜினாமா



வாஷிங்டன், ஜூலை 26

"பாதுகாப்பு குறைபாட்டுக்கு நான் முழுப் பொறுப்பேற்கிறேன். அண்மைய அசம்பாவித சம்பவங்கள் காரணமாக, கனத்த இதயத்துடன் இயக்குநர் பதவியிலிருந்து விலகும் கடினமான முடிவை எடுத்துள்ளேன்" என்று கிம்பர்லி சீட்டல் இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த 13ஆம் திகதி பென்சில்வேனியாவில் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

உளவுப் பிரிவின் கவனக்குறைவே இந்தச் சம்பவம் இடம்பெறக் காரணம் என குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அத்தோடு, உளவுப் பிரிவின் இயக்குநர் கிம்பர்லி சீட்டல் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, ட்ரம்பின் உயிரைப் பறிக்க முயன்ற இந்தச் சம்பவம், உளவுப் பிரிவின் தோல்வி என்றும் நடந்த குளறுபடிகளுக்கு முழுப் பொறுப்பை ஏற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், உளவுப் பிரிவின் இயக்குநர் கிம்பர்லி சீட்டல் இராஜினாமா செய்தார். (எ)



# புதன் கிரகத்தில் வைரம் அதிகம் இருக்க வாய்ப்பு

### சீனா, பெல்ஜியம் விஞ்ஞானிகள் தகவல்

புதுடில்லி, ஜூலை 26

பூமிக்கு அருகில் உள்ள புதன் கிரகத்தில் வைரம் அதிக அளவில் இருக்க வாய்ப்பு இருப்பதாக சீன மற்றும் பெல்ஜியம் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.


சூரிய குடும்பத்தில் முதலாவதாக உள்ள கிரகம் புதன். 3ஆவது இடத்தில் உள்ள பூமிக்கு அருகில் உள்ளது. இந்த நிலையில், சீனா மற்றும் பெல்ஜியம் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், புதன் கிரகத்தில் படிந்துள்ள வைரங்கள் பற்றி ஒரு ஆய்வை மேற்கொண்டனர்.

புதன் கிரகத்தின் மேற்பரப்பில் கார்பன், சிலிக்கா மற்றும் இரும்பு கலவை இருப்பது தெரியவந்துள்ளது. மேலும், இவற்றுக்கு அடியில் வைர அடுக்குகள் இருக்க வாய்ப்பு இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதீத வெப்பநிலை மற்றும் அழுத்தம் காரணமாக தரைப் பரப்புக்கு கீழே உள்ள கார்பன், வைரக்கட்டிகளாக மாறியிருக்க வாய்ப்பு உள்ளது.

ஏராளமான வைரம் இருப்பதால் மனிதர்கள் புதன் கிரகத்துக்கு செல்ல வாய்ப்பு இருக்கிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரிய வகை மீனை தேடி சென்ற ஆராய்ச்சியாளர்கள் 8 பேர் பலி!



ஸ்டான்லி, ஜூலை 26

அரிய வகை மீனை தேடி சென்ற ஆராய்ச்சியாளர்களின் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர்.

அட்லாண்டிக் கடலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள தீவுக்கூட்டம் போக்லாந்து தீவுகள். இந்த தீவுக்கூட்டத்தை இங்கிலாந்து நிர்வகித்து வரும் நிலையில் தீவுக்கூட்டம் தங்களுக்கு சொந்தமானது என்று ஆர்ஜென்டீனா கூறிவருகிறது.

இதனிடையே, அட்லாண்டிக் கடலின் போக்லாந்து தீவுப் பகுதியில் டூத்பிஷ் என்ற அரிய வகை மீன் காணப்படுகிறது.

இந்த நிலையில், இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் உள்ள செயின்ட் ஹெலீனா தீவில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் உட்பட 30 பேர், அரிய வகை டூத்பிஷ் மீனை தேடி மீன்பிடி படகில் புறப்பட்டுள்ளனர்.

போக்லாந்து தீவில் இருந்து கடலில் 200 மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்தபோது மோசமான வானிலை காரணமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 22 பேர் கடலில் மாயமாகினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன், வைப்புக்கான வட்டி வீதத்தை இலங்கை மத்திய வங்கி குறைத்தது!

கொழும்பு, ஜூலை 26

**நாட்டின் பொருளாதாரத்தில் சமகாலத்தில் அவதானிக்கப்பட்ட குறிகாட்டிகளின் அடிப்படையில் வைப்புகள் மற்றும் கடன்களுக்கான வட்டிவீதங்களை முறையே 8.25 வீதமாகவும் 9.25 வீதமாகவும் குறைப்பதற்கு நாணய சபை தீர்மானித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.**



நாணய சபையின் இந்த ஆண்டுக்கான 4ஆவது மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

மேலும், கடந்த மாதம் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி, அண்மைய வரி மறுசீரமைப்பை அடுத்து பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைந்தளவிலான தாக்கம் ஏற்பட்டமை, நிலையான பணவீக்க எதிர்பார்க்கைகள், குறைந்தளவிலான வெளிநாட்டுத்துறை அழுத்தங்கள் உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் கொள்கை வட்டி வீதங்களை 25 அடிப்படை புள்ளிகளால் குறைப்பதற்கு நாணய சபை தீர்மானித்துள்ளது. இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 8.25 வீதம், 9.25 வீதமாகக் குறைக்கப்பட்டன. அத்துடன், நியதி ஒதுக்குவீதத்தை முன்னர் நிர்ணயிக்கப்பட்ட 2 சதவீத மட்டத்திலேயே தொடர்ந்து பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பிரகாரம் கடந்த ஜூனில் முதன்மை பணவீக்கமானது 1.7 சதவீதமாகப் பதிவானது. மின்சாரம், எரிபொருள், திரவ பெற்றோலிய எரிவாயு போன்றவற்றின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சி இதற்கு காரணமாக அமைந்தது.

இதேபோன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள மதிப்பீடுகளின்படி நாட்டின் பொருளாதாரம் 5.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை, மேம்பட்ட நிரம்பல் நிலைமைகள், வெளிநாட்டுக் கேள்வி நிலைமையில் படிப்படியான மீளெழுச்சி, சுற்றுலாத்துறை மீட்சி போன்றவற்றால் நடுத்தர காலத்தில் உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பண அனுப்பல்கள் என்பன மூலமான வருமானம் தொடர்ந்தும் நேர்மறையான மட்டத்தில் பதிவாகியிருக்கும் அதேவேளை, கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 440 கோடி டொலர்களாகப் பதிவான மொத்த வெளிநாட்டுக்கையிருப்புடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் கடந்த ஜூன்மாத இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 560 கோடி டொலர்களாக அதிகரித்துள்ளன.

இது இவ்வாறிருக்க சீன அபிவிருத்தி வங்கியுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளும், சர்வதேச பிணைமுறிதாரர்களுடன் இறுதிக்கட்ட இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுகளும் முன்னேற்றகரமான மட்டத்தில் இருக்கின்றன. இருப்பினும் இதனுடன் தொடர்புடைய தகவல்கள் சந்தையில் உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் அவற்றை வெளியிடமுடியாது எனவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மேலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்புகள் மந்தகரமான நிலையில் இருப்பினும், இவ்விடயத்தில் மத்திய வங்கி எவ்வகையிலும் தொடர்புபடவில்லை. மாறாக அரசாங்கம் இதுகுறித்து அவதானம் செலுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



மரக்கறிகளின் விலை உயர்வை பார்த்து திகைத்து நிற்கும் பொதுமகன் ஒருவர்...!

- இடம் கொழும்பு கோட்டை பொதுச் சந்தை.

# அரச ஊழியர்களுக்கு சிறப்பு விடுமுறை!

கொழும்பு, ஜூலை 26

கடந்த மே, ஜூன் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவால் பணிக்கு சமுகமளிக்காத அரச ஊழியர்களுக்கு சிறப்பு விடுமுறை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், குருநாகல், பொலநறுவை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச அதிகாரிகளுக்கு இந்த விசேட விடுமுறை வழங்கப்பட உள்ளது.

அந்த மாவட்டங்களில் வெள்ளம், நிலச்சரிவு அனர்த்தங்கள் மற்றும் இதனால் ஏற்பட்ட வீதித் தடைகளால் பொதுப் போக்குவரத்து தடைப்பட்டதாலும் அரச ஊழியர்கள் பலர் பணிக்கு சமுகமளித்திருக்க வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராஜபக்ஷ குடும்பத்தினரை பாதுகாக்க புதிய அமைப்பு

கொழும்பு, ஜூலை 26

சிறீ லங்கா பொதுஜன பெரமுன குறைந்தது நான்கு குழுக்களாக பிரிந்துள்ள நிலையில் ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்க புதிய அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

"மகிந்த சிந்தனையை பாதுகாப்பதற்கான தேசிய ஒன்றியம்" என்ற பெயர் சூட்டப்பட்ட இந்த அமைப்பு இளைஞர்களின் தலைமையில் இயங்கும் என்று கூறப்படுகின்றது.

இதன் அழைப்பாளராக நாமல் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான தம்மிக சுபசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் "இளைஞர்களுக்கு ஓர் நாளை" என்ற அமைப்பின் செயல்பாட்டாளராக செயல்பட்டிருந்தார்.

நாமல் ராஜபக்ஷ தற்போது சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக செயல்பட்டு வருகிறார். தனது தனிப்பட்ட அரசியல் இலக்குகளை முன்னெடுப்பதற்காகவே இந்த அமைப்பை உருவாக்கியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ஐ)

# சாரதிகளுக்கு கறுப்பு பட்டியல் முதல்கட்ட மதிப்பீடு நடக்கிறது

கொழும்பு, ஜூலை 26

வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரத்தை கறுப்பு பட்டியலில் இடும் முறைமையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் முதல்கட்ட மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் அவர் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் கருப்பு பட்டியல் முறைமைய அமுல்படுத்தப்படும். இதன்மூலம், நெடுஞ்சாலைகளில் வீதி ஒழுங்கு விதிகளை மீறுவோருக்கு எதிராக பொலிஸாரால் தண்டப்பத்திரம் வழங்கப்படும். அனைத்து சாரதிகளுக்கும் அவர்களின் தவறுகளுக்கமைய கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான புள்ளிகள் சேர்க்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை அதிகரிக்குக!

## டலஸ் அழகப்பெரும வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செலுத்த வேண்டிய கட்டுப்பணம் கடந்த 43 வருடங்களாக திருத்தப்படவில்லை - என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1981ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்துக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் பரிந்துரைக்கப்படும் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாய் மட்டுமே கட்டுப்பணம் செலுத்த வேண்டும். இதேசமயம் சுயேச்சை வேட்பாளர் அல்லது வேறு ஏதேனும் கட்சி அல்லது வாக்காளர்களால் பரிந்துரைக்கப்படும் வேட்பாளர் 75 ஆயிரம் ரூபாயை கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்

இந்தத் தொகையை அதிகரிப்பதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிலையில், குறித்த தொகையானது அரசியல் கட்சிகளுக்கு 25 இலட்சம் ரூபாயாகவும், சுயேச்சை வேட்பாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாயாகவும் அதிகரிக்க தேர்தல் ஆணைக்குழு முன்மொழிந்தது.

இதுவொரு பொருத்தமான முன்மொழிவாக இருந்த நிலையில், கடந்த தேர்தலின் போது 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதன்படி, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், முதல் இரண்டு போட்டியாளர்களை தவிர, ஏனைய வேட்பாளர்களின் கட்டுப்பணம் ஒருங்கிணைந்த நிதிக்கு மாற்றப்பட்டது. ஆனால், இம்முறை தேர்தலில் எந்தவோர் அடிப்படையும் இன்மையால் வேட்பாளர்களின் எண்ணிக்கை 80 அல்லது 85 ஆக இருக்கலாம். மேலும், வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கும் ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் பெருந்தொகை செலவிடப்படும் - என்றார்.

அவருக்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த திருத்தத்தை மேற்கொள்வதற்கான கால அவகாசம் இல்லை - என்றார். (ஐ)

# நேர்முக பரீட்சைக்கு சென்ற இளைஞர் ரயில் மோதி பலி!

கொழும்பு, ஜூலை 26

நேர்முக தேர்வுக்கு சென்றுகொண்டிருந்த இளைஞர் பாணந்துறையில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார்.

களுத்துறை - பாணந்துறை - எலுவில பிரதேசத்தை சேர்ந்த 22 வயதான கவிது ஹசரேல் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேர்முக பரீட்சைக்காக தனது தந்தையுடன் சென்ற போதே விபத்து ஏற்பட்டுள்ளது. பாணந்துறையிலிருந்து மருதானை நோக்கி சென்ற ரயில் மோதியே இளைஞர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழருக்காக...

தலைவராவார்.

1943 மார்ச் 8ஆம் திகதி பதுளை - லுணுகலையில் பிறந்த விக்கிரமபாகு கருணாரத்ன, கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கற்று இலங்கை பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார்.

1962இல் லங்கா சமசமாஜ கட்சியில் இணைந்த அவர் 1972இல் அந்தக் கட்சியின் மத்திய குழுவுக்கு தெரிவானார். பின்னர் முரண்பாட்டால் கட்சியிலிருந்து விலகிய அவர், 1977இல் வாசுதேவ நாணயக்காரவுடன் இணைந்து நவ சமசமாஜ கட்சியை ஆரம்பித்தார்.

2010இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தங்கத்துரை...

கலவரத்தின் ஓர் அம்சமாக வெலிக்கடை சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளை சிங்கள கைதிகள் கொடூர மாக தாக்கிக் கொல்லப்பட்டனர். குட்டிமணி உயிருடன் இருக்கும்போதே அவரின் கண்களை தோண்டி சிங்கள கைதிகள் எறிந்து குரூரம் புரிந்தனர். (ஐ)

## ஜனாதிபதி - விஜயதாச

வெளியிட்டார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் 90 சதவீதத்தினர் தன்னை ஆதரிக்கின்றனர் என்று தெரிவித்த அவர், மக்கள் கூட்டணியின் சார்பில் தேர்தலை சந்திக்கவுள்ளதாகக் கூறினார். அத்துடன், தேர்தல் சின்னத்தை பின்னர் அறிவிப்பார் என்றும் தெரிவித்தார்.

மேலும், "நாட்டினதும் நாட்டு மக்களினதும் வெற்றியை முன்னிறுத்தியே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குகிறேன். உங்களின் விதியை தீர்மானிக்கும் உரிமையை அரசியல்வாதிகளிடம் கையளித்துப் பார்த்துக் கொண்டிருப்பதால் எஞ்சியது துன்பம் மாத்திரமே. உலகம் மாற்றமடைவதைப் பார்ப்பதற்கு விரும்பினால் அந்த மாற்றத்தை உங்களால் மாத்திரமே ஏற்படுத்தமுடியும்.", என்றும் கூறினார்.

அத்துடன், அமைச்சராக இருந்தவாறு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஊடகவியலாளர்...

விடுதலைப் புலிகள் அமைப்பின் அனுசரணையில் இயங்கிய புனிதபூமி இல்லத்தில் வளர்ந்தவர். பாடசாலை கல்வியை முடித்த அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் வெளியீட்டு பிரிவு, தமிழீழ தேசியத் தொலைக்காட்சி என்பவற்றில் பணியாற்றியிருந்தார்.

2009 போர் முடிவடைந்த பின்னர் புனர்வாழ்வு பெற்ற இவர் நிமிர்வு, சமூகம், எழுநா ஆகிய ஊடகங்களில் பணியாற்றியிருந்தார். இவர், பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் கட்டுரையாளராகவும் அரசியல் விமர்சகராகவும் தடம் பதித்ததுடன், ஆவணப்பட, குறும்படத் தயாரிப்பாளராகவும் செயல்பட்டிருந்தார். இதேநேரம், வவுனியா பிரஜைகள் குழுவிலும் அங்கம் வகித்திருந்தார்.

இசைப்பிரியனின் சகோதரனான செஞ்சுடர் தமிழீழ விடுதலைப் புலிகளின் வட போர்முனையின் பயிற்சி ஆசிரியராக இருந்தவர். இவர் இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

இசைப்பிரியனின் தாயார் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் புற்று நோயால் காலமாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி - பொன்சேகா

தளத்திலேயே இதனைப் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலிகளை...

ஆதரவை வழங்கினோம். எமக்குப் பொருத் தமில்லாத விடயங்களை அவர் செய்தாலும் இன்று வரை நாங்கள் எதுவும் கூறவில்லை. ஆனால், கட்சி இரண்டாகப் பிளவு பட்டதுதான் நமக்குக் கிடைத்த பரிசு. எனவே, எதிர்காலத்தில் அரசியல் முடிவொன்றை எடுப்போம்.

ஆனால், ரணிலுக்கு நாங்கள் உண்மையாகவே உதவி செய்தோம். அவர் அதை மொட்டுவுக்கு செய்ய வில்லை. அவர் வரும் போதே அது நமக்குத் தெரியும். ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்தார். சிறீலங்கா சுதந்திர கட்சி, நல்லாட்சி அரசாங்கம், ஜே. வி. பி. உடைந்தது, விடுதலைப் புலிகளும் உடைக்கப்பட்டனர்.

நாங்கள் இன்றும் ரணில் விக்கிரம சிங்கவுடன் கலந்துரையாடி வருகிறோம். இணக்கம் ஏற்பட்டால் அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் விவாதிக்க நாங்கள் தயார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ள அனைவருடனும் கலந்துரையாடுவோம். அதன் பின்னரே இறுதி முடிவு எடுப்போம்" - என்றார். (ஐ)

## வெலிக்கடை...

நாளான ஜூலை 24ஆம் திகதியான நேற்றைய தினம் யாழ்ப்பாணம் "தந்தை செல்வா கலையரங்கில்" இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## மானிப்பாய்...

மாலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், 46 வயது பெண் ஒருவரே உயிரிழந்தார். அவரின் மகள் காய மடைந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை மோதிய வாகனத்தை செலுத்தியவரும் அதில் பயணித்தவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## வெடிமருந்துடன்...

ஒரு கிலோ ரி. என். ரி. வெடிமருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த இளைஞர் எழுதுமட்டுவாழிலிருந்து வெடிமருந்துடன் தனியார் பேருந்து நிலையத்தில் பயணித்த நிலையில் இராணுவ புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். இதனால், வெடிபொருட்களை கையாளும் அனுபவத்தை கொண்டிருந்தார். கண்ணிவெடிகளிலிருந்து மருந்தை சேகரித்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார். மீனவர்களுக்கு விற்பனை செய்யும் நோக்கிலேயே அவர் இந்த வெடிமருந்தை எடுத்து வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவர் இதே குற்றத்துக்காக முன்னரும் கைதாகி விடுதலை செய்யப்பட்டவர் என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் மரணம் ஒருவர் காயம்!

கொழும்பு, ஜூலை 26

கொழும்பில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

கிராண்ட்பாஸ் - வதுல்லவத்தை பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச்சூட்டில் 31 வயது நபரே உயிரிழந்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

# வனவிலங்குகள் துன்புறுத்தல் 1992ஐ அழைத்து முறையிடுக!

கொழும்பு, ஜூலை 26

வன விலங்குகளுக்கு ஏதேனும் தீங்கு ஏற்படுத்தப்பட்டால் அது குறித்து 1992 எனும் துரித இலக்கம் மூலம் தகவல் வழங்குமாறு வனஜீவராசிகள் திணைக்களம் பொது மக்களை கேட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோத மின் கம்பிகளில் சிக்குண்டு வன விலங்குகளும் மனிதர்களும் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வனவிலங்குகளுக்கு மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பேரில் விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, வன விலங்குகள் தொடர்பில் 24 மணிநேர துரித இலக்க சேவை ஊடாக தகவல்களை வழங்க முடியும் என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# பண்டத்தரிப்பில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

பண்டத்தரிப்பில் வீடொன்றில் உயிரிழந்த ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

பண்டத்தரிப்பு - செட்டிக்குறிச்சியை சேர்ந்த 74 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரின் வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் அங்கு சென்று பார்த்தனர். அப்போது, வீட்டின் முன்பகுதியில் சடலம் காணப்பட்டது.

இதையடுத்து, இளவாலை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓய்வூதியர்களுக்கு செப். முதல் ரூ. 3,000

கொழும்பு, ஜூலை 26

செப்ரெம்பர் மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கு 3 ஆயிரம் ரூபாயை விசேட கொடுப்பனவாக வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதன்படி, சம்பள முரண்பாடு தீர்க்கப்படும் வரை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ஐ)

# தங்கப் பதக்கம் வென்ற மாணவனுக்கு வரவேற்பு



திருகோணமலை, ஜூலை 26

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்ற திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி மாணவனுக்கு கல்விச் சமூகம் மகத்தான வரவேற்பளித்தது.

தங்கப் பதக்கம் வென்ற மாணவன் எஸ். டிரெஸ்மன் மற்றும் அவரின் பயிற்றுவிப்பாளர், ஆசிரியர் சிவதீபன் ஆகியோருக்கு கல்விச் சமூகம் இவ்வாறு வரவேற்பளித்து கௌரவித்தது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொலிஸ் மா அதிபர் செயல்படவே இடைக்காலதடை; பதவிநீக்கமல்ல

## மூத்த அமைச்சர் இப்படி விளக்கம்

கொழும்பு, ஜூலை 26

**பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு மாத்திரமே பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாறாக, அந்தப் பதவி வெற்றிடமாகவில்லை. எனவே, ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது.**

உயர் நீதிமன்ற உத்தரவில் பொலிஸ் மா அதிபருக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பதவி வெற்றிடமாகவில்லை. அரசமைப்பில் 21ஆவது திருத்தத்துக்கு அமைய பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகாத நிலையில் ஜனாதிபதிக்கு பதில் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு அதிகாரமில்லை என்று மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதனால், இந்த சட்ட சிக்கல் தீர்க்கப்படும் வரை பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகவில்லை என்றே கருதப்படும். எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய பொலிஸ்மா அதிபரால் அவரின் கடமைகளை செய்வதற்கு மாத்திரமே தடை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# ஓரினச் சேர்க்கை சட்டம் மீளப்பெறப்பட வேண்டும்

## சர்வமத தலைவர்கள் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 26

ஓரினச் சேர்க்கை சட்டமூலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளப்பெற வேண்டும் என்று சர்வமத தலைவர்கள் கேட்டுள்ளனர்.

நேற்றைய தினம் கொழும்பு - பொரளையில் நடந்த ஆயர் தலைமை பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

களனி வஜிர தேரரின் தலைமையில் நடந்த இந்த செய்தியாளர் சந்திப்பில், கர்தினால் மல்கம் ரஞ்சித், ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, சோம ரத்தின தேரர், ஜீனானந்த தேரர், அல் செய்க் ஹசன் மௌலானா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, "சமூக சீரழிவுக்கு வழிவகுக்கும் ஒழுக்கக்கேடான ஓரினச் சேர்க்கை சட்டங்கள் நாகரிக சமூகத்தை அழிக்கின்றது என்ற வகையில் ஜனாதிபதி இந்த சட்டவாக்கத்தை அமுல்படுத்தக்கூடாது. இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் மதத் தலைவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# எம். பி. அல்லாத விஜயகலாவுக்கும் அபிவிருத்தி நிதியாக ரூ. 19 கோடி!

யாழ்ப்பாணம், ஜூலை 26

பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சரான விஜயகலா மகேஸ்வரனுக்கு 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட அபிவிருத்தி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், சி. சிறீதரன், எம். ஏ. சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன் ஆகியோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான விஜயகலா மகேஸ்வரன் சமர்ப்பித்த 19 கோடி ரூபாய் பெறுமதியான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் க. விக்னேஸ்வரனுக்கு இதுவரை விசேட நிதி ஒதுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குருந்தூர்மலை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 26

குருந்தூர்மலையில் கடந்த 2022 செப்ரெம்பர் 21ஆம் திகதி நடத்தப்பட்ட போராட்டத்துக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கு அடுத்த தவணைக்காக 2025 ஜனவரி 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் 2022 செப்ரெம்பர் 21ஆம் நாளன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் மற்றும் இரத்தினராசா மயூரன், சி. லோகேஸ்வரன் ஆகியோருக்கு எதிராக தொடர்ந்து வழக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காற்றாலை அமைக்கக் காணி; பேசாலை மக்கள் கடும்எதிர்ப்பு


மன்னார், ஜூலை 26

காற்றாலை அமைப்பதற்காக தேவாலயம் மற்றும் பொது மக்க ளின் காணிகளை அளவீடு செய்வ தற்கு பேசாலை மக்கள் ஒன்றுதி ரண்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலையில் இந்தப் போராட்டம் நடை பெற்றது. இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மன்னார் தீவில் காற்றாலை அமைப்பதற்கும் கனியவள மணல் அகழ்வுக்கு எதிராகவும் மன்னார் தீவு மக்கள் மற்றும் பொது அமைப் புகள் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். இந்த நிலையில் பேசாலையில் 2ஆம் கட்ட காற் றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம், மக்களுக்கு சொந்தமான காணிகளில் காற்றாலை அமைக்கும் நோக்கில் நில அளவீடு செய்வதற் காக பொலிஸ்



பாதுகாப்புடன் அதிகாரிகள் நேற்று அந்தப் பகு திக்கு வந்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அந்தப் பகுதி மக்கள் கூடி போராட்டம் நடத்தினர். இதைய டுத்து, நில அளவை திணைக்களத்தினர் தமது முயற்சியை கைவிட்டு திரும்பிச் சென்றனர். (ஐ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்



கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

"சர்வதேச விசாரணையே தேவை", "இழப்பீடுகள் வேண்டாம் - எமக்கு பிள்ளைகளே வேண்டும்", என்ற கோஷங்களை எழுப்பிய உறவுகள், இந்த வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (ஐ)

# இனப்பிரச்னை தீர்வுக்காக நேர்மையாக குரல் கொடுத்தவர் தோழர் விக்கிரமபாகு

## புளொட் தலைவர் சித்தார்த்தன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

"தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னை தீர்வுக்காகத் தொடர்ந்து நேர்மையாகக் குரல் கொடுத்து வந்த இடதுசாரி தலைவர் தோழர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கிறது - என்று அந்தக் கட்சியின் தலைவரும் எம். பியுமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவின் மறைவையொட்டி அவர் விடுத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நவ சமசமாஜ கட்சி தலைவராக தனது 81ஆவது வயதில் காலமான அவர், தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய அடிப்படையிலான ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்று விசுவாசமாகவும் நேர்மையாகவும் குரல் கொடுத்து வந்த ஒருவர்.

எங்களுடைய செயலதிபர் உமாமகேஸ்வரனுடனும் பிற்பாடு என்னுடனும் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த அவர், தனது இறுதிக் காலம் வரையிலும் அந்த உறவுகளை பேணிவந்தவர்.

தேசிய இனப் பிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமறஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள், இராணுவத்தின் வசமிருக்கும் நிலங்களை உரிமையாளர்களுக்கு மீள கையளித்தல் போன்ற விடயங்களுக்காக உள்நாட்டிலும் நாட்டிக்கு வெளியிலும் மிக தீவிரமாக குரல் கொடுத்து வந்தார்.

தமிழ் மக்களின் நேர்மையான பெரும்பான்மையின நண்பர்களின் பட்டியலில் அமரர் தோழர் விக்கிரமபாகு கருணாரத்னவுக்கு என்றென்றும் தனித்துவமான இடம் இருக்கும்.

இவருடைய இழப்பு இலங்கையில் இருக்கும் இடதுசாரிகளுக்கு மட்டும் அல்ல தங்களின் அடிப்படை உரிமையை கோரி நின்று போராடுகின்ற ஒவ்வொருவருக்கும் பேரிழப்பாகும் - என்றுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org